# ஜனவிநோதினி.

இல. 7. ஜூலை மீ 1870. புஸ்த. I.

## செல்வத்தையும் வறுமையையும் பற்றிய கதை.

தெய்வச்செயலின் புத்திரிகளாகிய செல்வம் வறுமை என்ற இரண்டு கன்னிகைகள் பூர்வீகத்திலிருந்த (Phænicia) பீனிக்கியா ராஜ்யததின் ராஜதானியாகிய (Tyre) தீருநகரத்திலுள்ள ஓர் மாளிகையில் வாசம்பண்ணிக்கொண்டிருந்தாகள். மூத்த குமாரத்தியாகிய செல்வமென்பவள் எவரும் மயங்கத்தக்க சௌந்தரியமும், சந்தோஷம் நிறைந்த முகரூபமுமுள்ளவள். அவளுடைய தங்கையாகிய வறுமை என்பவளோ யாவரும் வெறுக்கத்தக்க அந்தக்கேடுள்ளவளும், முகததில் சஞ்சலம் நிறைந்தவளுமாயிருநதாள். இவர்களுடைய வாசஸ்தலததிற்குச் சமீபத்திலிருந்த ஓர் வீட்டில் திரண்ட ஐசுவரியவந்தனும், அபிவிர்த்தியென்னும பேரையுடையவனுமாகிய ஓர் வர்த்தகன் குடியிருந்தான். அவனுக்கு அதிஷ்டன், துர் அதிஷ்டன் என்ற இரண்டு குமாரர்களிருந்தார்கள். இவ்ர்களிருவரும் கல்விகளைக் கற்றபின்பு தங்கள் தகப்பனுடைய வியாபாரத்தொழிலைச் செய்யும்பொருட்டு வர்த்தகவிஷயங்களில் பழகித் தேற்ந்துவந்தார்கள். அவர்கள் தங்கள் குழந்தைப் பருவமுதற்கொண்டு ஒருவனைவிட்டு ஒருவர் பிரியாயல் ஒருவருக்கொருவர் மிகுந்த சகோதரபாசததையும் நேசததையும பாராட்டிவந்தார்கள். இபபடியிருக்க, அவர்கள் யௌவனவயதை அடைந்தபோது அவர்களுடைய சகோதர சிநேகத்திற்கு இடையூறு நேரிடவும், அவர்களுக்குள் விரோதம் தலைப்படவும் ஏதுவுண்டாயிற்று. யௌவனவயதில் அவர்களுக்குள் உற்பத்தியான ஸ்திரீநேசத்திறகுமுன் அவர்களுடைய சகோதரநேசம் பறக்க எத்தனிததது. அவர்களிருவரும் செல்வமென்ற கன்னிகையின் அதிரூபலக்ஷணங்களைப்பார்த்து மயங்கி,

எவ்விதத்திலும் அவளுடைய தயவைப்பெற்று அவளை விவாகஞ்செய்துகொள்ளவேண்டுமென்ற பலத்த நிர்மாணமுள்ளவர்களாய் அக்கன்னிகையைக் கைவசப்படுத்துமபொருட்டு எண்ணிறந்த பிரயத்தனங்களைச் செய்தார்கள். அவர்கள் தனித்தனியே அவளுக்குச் சகலவித உபசாரணைகளையுஞ்செய்து, நானாவித இச்சகவார்த்தைகளையும் சொல்லிவந்தார்கள். அக்கன்னிகையானவள் தன்பேரில் ஆசையிருந்த அக்காதலரிருவரில் ஒருவனையாவது தள்ளிவிடாமல் ஒரு சமயத்தில் ஒருவனுக்கும், மற்ற சமயத்தில் மற்றவனுக்கும் தன் தயவைக் காட்டிக்கொண்டுவந்ததினால், அவ்விருவருக்கும் ஆசை அதிகரிக்கவும், அவர்கள் அதை நிறைவேற்றுமபொருட்டு வரவரக் கடும்பிரயத்தனங்களைச் செய்யவும் ஏதுவுண்டாயிற்று. ஆகிலும் அவள் அவ்விருவரையும நோக்கி: "என சகோதரியாகிய வறுமை என்பவளை விட்டு நான் வெகுகாலம் பிரிந்திருப்பது கூடாதகாரியமாகையால், என்னோடுகூட அவளுக்கும் விவாகம் நடவாதபக்ஷத்தில் நான் விவாகஞ்செய்யப்போகிறதில்லை; இது என் பலத்த தீர்மானம்" என்றுரைத்தாள்.

அபிவிருத்தி என்னும் வர்த்தகன் தன் குமாரரிருவரும் செல்வமென்ற கன்னிகையை விவாகம்பண்ணிக்கொள்ளும்பொருட்டு அவர்களுக்கிருந்த ஆசையின் அகோரத்தைப்பார்த்து, அதினால் அவர்களுக்கு என்ன மோசம் சம்பவிக்குமோவென்று பயந்து, தீங்கொன்றும் நேரிடாதபடிக்கு ஒருநாள் அவர்களிருவரையும தன்னிடத்தில் அழைத்து: "நீங்கள் என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். செல்வம் வறுமை என்ற இரண்டு கன்னிகைகளைப்பற்றி நீங்களிருவரும சீட்டெழுதிப்போட்டு உங்களில் எவன்பேருக்குச் செல்வம என்பவள் விழுகிறாளோ, அவனே அக்கன்னிகையை விவாகம்பண்ணிக்கொள்ளட்டும். அப்படியே எவன்பேருக்கு வறுமை வருகிறாளோ, அவனே அவளைக் கலியாணம் செய்துகொள்ளக்கடவன். இதினால காதலினிமித்தம் உங்களிருவருக்குள் உண்டாயிருக்கும் போராட்டத்திற்கு முடிவுண்டாகட்டும். நான சொன்னபடியே உடனே செய்யுங்கள்" என்றான். சகோதரரிருவரும தங்கள் பிதாவானவர் சொன்ன வார்த்தையைக் கேட்டு, அப்பிரகாரமே சீட்டுகளை எழுதிப்போ

டார்கள். அப்போது அதிஷ்டன் என்பவன் பேருக்குச் செல்வமென்ற கன்னிகை விழுந்தாள். வறுமை என்பவள் துர்அதிஷ்டன்பேருக்கு வந்துசேர்ந்தாள்.

தன் குமாரிருவருடைய விவாக உற்சவம் நடந்த கொஞ்சக்காலத்திற்குப்பின்பு அபிவிர்த்தி என்னும் வர்த்தகன் தன் மூத்த குமாரனாகிய அதிஷ்டனைப்பேருக்குத் தன்னுடைய திரளான ஆஸ்தியில் அதிகமான பாகத்தை எழுதிவைத்துவிட்டு இறந்துபோனான்.

செல்வத்தை விவாகம்பண்ணின அதிஷ்டன் தன் பெண்ஜாதியின் அதிசய ரூபலக்ஷணங்களைப் பார்த்துப்பார்த்து மதிமயங்கி, அவளுடைய உல்லாச நடைகளையும், மகிழ்ச்சியுள்ள அவள குணங்களையும் கண்டு ஆநந்தபரவசப்பட்டு, விலைமதிக்கத்தகாத ரத்நங்களாலும் பசும்பொன்னினாலும் சமைந்த விதம்விதமான ஆபரணங்களைக்கொண்டும், விநோதமான ஆடைகளைக்கொண்டும அவளை அலங்கரித்துப்பார்த்தான். ஓர் சிங்கார பூங்காவனத்தில ஒரு விசித்திரமான மாளிகையைக் கட்டினான். தன்னுடைய அலங்காரமான தோட்டங்களுக்குள் சிற்றாறுகள் வந்து பாயும்படி செய்தான். தன் மாளிகையில் அடிக்கடி ராஜவிருந்துகள் செய்து, அவ்விராஜ்யத்திலிருந்த தனவான்கள், கனவான்கள், பிரபுக்கள் முதலியோரெல்லாரையும் விருந்துக்கழைத்து அவர்களைச சம்பிரமமான போஜனபானங்கள் ஆடலபாடல்களினால் சந்தோஷப்படுத்தினான். ஆனால் தனக்குக கிட்டின பந்துஜனங்களை அந்நியர்களைப்போலப பாவித்தும் அவமதித்தும வந்தான். தன் பால்ய சிநேகிதர்களையெல்லாம் முற்றிலும் மறந்துவிட்டான். தன் உடன்பிறந்த சகோதரனையும் படிப்படியாய் வெறுத்துக் கடைசியில் அவனைத் தன் வீட்டுவாசலுக்குச சமீபமாய்க்கூட வாராதபடிக்குச் செய்துவிட்டான.

எவ்வளவு பெரிதான ஆறுகளும ஏரிகளுங்கூடத் தகுந்த கரைகளினால் பாதுகாக்கப்படாவிட்டால் அவைகளிலுள்ள அளவற்ற ஜலமானது அதிசீக்கிரத்தில் எங்குஞ் சிதறி மறைந்துபோய்விடுகிறதுபோல, எவ்வளவான ஐசுவரியமும் மட்டான செலவினாலும், விவேகமான கையாடுதலினாலும் பாதுகாக்கப்படாவிட்டால் அதிசீக்கிரத்தில் மாயமாய்ப் பறந்துபோய்விடுமென்பதற்குச் சந்தேகமில்லையே. சில வருஷங்களுக்குள்ளாக அதிஷ்டனு

டைய் திரளான ஆஸ்திபாஸ்திகளெல்லாம் அவனுடைய டம்பமான நடத்தைகளினாலும், புத்தியீன வீண்செலவுகளினாலும் வேகமாய்க் குறைந்துகொண்டுவந்தன. அவனுடைய கவலையீனம் ஒழுங்கீனங்களினிமித்தம் அவனுடைய வியாபாரவிஷயங்களில் அபிவிர்த்தியில்லாமல் போனதுந்தவிர பெரிய நஷ்டங்களும் நேரிட்டன. இவவாறு தன் புத்தியீன செலவுகளினால் அவன் தோற்றுவிட்ட ஆஸ்திகளெல்லாம்போக, மீதியாயிருந்தவற்றை அவனுடைய கடன்காரர் வந்து பிடித்துக்கொண்டார்கள். அப்போது அவன், முன தன்னிடத்தில் வந்து விருந்துகள் சாப்பிட்டவர்களும, வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு போனவர்களுமாகிய பல சிநேகிதரிடத்திலும் போய், தனக்கு நேரிட்ட ஆபத்தில் அவர்களுதவிசெய்யவேண்டுமென்று வருந்திக் கேட்டபோது, அவர்களில் ஏறக்குறைய எல்லாரும் அவனை ஒரு அந்நியனைப் போல் பாவித்து அவன் விண்ணப்பத்திற்குச் செவிகொடாமல் போனார்கள். தன் வாழ்வுநாட்களில் அவன் அவமதித்து நடத்தின அவன் சிநேகிதர்களெல்லாம் இப்போது அவனைப்பார்த்து நகைத்துப பரிகாசம்பண்ணினார்கள். எல்லாவற்றிலும் விசேஷமென்னவெனில: அவனுடைய மனைவியாகிய செல்வமென்பவள் அவனை நிந்திக்கவும், அவன் சமீபத்தில் வருகையில் தன் முகத்தைத் திருப்பிக்கொள்ளவும் துவககினாள். ஆனால் இவ்வாறு அவனுடைய மனைவியானவள் அவனை இகழ்ந்து வெறுத்துத் தள்ளத்தள்ள, அவனோ அவளை அதிகமதிகமாய்க் கெஞ்சவும், தன் மீது அவள் இரக்கம் பாராட்டவேண்டுமென்று அவளை மிக வருந்தவுந தலைப்பட்டான். அவளுடைய மாயவித்தைகளினால் அவன் மயக்கங்கொண்டு முற்றிலும் அவளுக்கு வசியப்பட்டுப் போயிருநதான். ஆகையால் அவள் அவனைவிட்டு ஓட்டம்பிடிக்க எத்தனிததபோது, தன்னுடன் அவள் தங்கியிருக்கும்படி அவளை மிகவும கெஞ்சி மன்றாடிக்கொண்டு உன்மத்தனாய் அவளைப் பின்தொடாந்து ஓடினான். அப்பொழுது அவள் அவன் கைக்குத் தப்பும்பொருட்டு அதிகத தீவிரமாய் ஓட எததனிக்கையில, தன் முகத்தின்பேரில் வேஷமாக அவள் பூண்டிருநத பொய்முகமானது தவறிக் கீழேவிழுந்துவிட்டது. அதன்பின்பு அவளுடைய முகம் முன் எவ்வளவுக்கு யௌவனமும் அதி சௌந்தரியமுமுள்ளதாயிருந்ததோ, அவ்வளவுக்கு இபபொழுது வாடி

வதங்கி மிக அவலக்ஷணமுள்ளதாய்ப்போயிற்று. அப்பால் அதிஷ்டனுக்கு என்ன சம்பவித்ததென்று நிச்சயமாய் ஒன்றும் தெரியவில்லை. அவன் ஏகிப்துதேசத்துக்கு ஓடிப்போய் மிகுந்த நிர்பந்தஸ்திதியில் கொஞ்சகாலம் ஜீவித்துக்கொண்டிருந்துவிட்டு, பின்பு அங்கேயே உற்றார் உறவாரில்லாத அந்நியனாய் மரித்துப் போனானென்று ஓர் பிரஸ்தாபமுண்டு.

(அடுத்த இலக்கத்தில் தா அதிஷ்டனேயும் வறுமையையும் பற்றிய சரித்திரத்தைச் சொல்லுவோம்)

## நாய்கொல்லிக் குகை—கரி அமிலவாயு.

ஐரோப்பா கண்டத்தின் தென்பாகத்திலுள்ள (Naples) நேப்பில்ஸ் நாட்டில் ஓர் அதிசயமான குகையிருக்கிறது. அதற்குள் ஜனங்கள் நிமிர்ந்த நிலையில் நடந்துபோனால் அவர்களுக்கு யாதொரு சேதமும் சம்பவிக்கிறதில்லை. ஆனால் நாய்கள் தம் முகத்தைத் தரைக்குச் சமீபமாய் வைத்துக்கொண்டு அக்குகைக்குட் பிரவேசித்தால், அவைகள் சில அடிதூரம் உள்ளே சென்றவுடனே திடீரென்று கீழேவிழுந்து மரித்துப்போகின்றன.

இதற்குக் காரணமென்னவெனில்: கரி அமிலவாயுவென்ற ஒரு கொடிய விஷவாயு உண்டு. இவ்வாயு ஜீவஜெந்துக்களுடைய சுவாசத்தினாலும், அடுப்புக்கரிமுதலிய பொருட்கள் எரிகிறதினாலும், செத்துப்போன ஜெந்துக்களும் பூண்டுகளும் அழுகிப்போகிறதினாலும் உற்பத்தியாகிறது. இக்கொடிய விஷவாயுவை ஜீவஜெந்துக்கள் சுவாசித்தால் அவைகளுக்கு உயிர்ச்சேதமுண்டாகும். இத்தன்மையுடைய கரி அமிலவாயுவானது, மேலே சொல்லப்பட்ட குகையின் அடிவாரத்தில் ஏராளமாய் உற்பத்தியாகிச் சேர்ந்திருக்கிறது. அதினிமித்தந்தான் அக்குகைக்குள் நிமிர்ந்து நடந்துபோகிற ஜனங்களுக்கு யாதொரு சேதமும் நேரிடாமல், தரைக்குச் சமீபமாய் மூக்கை வைத்துக்கொண்டு அதற்குட் பிரவேசிக்கிற நாய்கள் அவ்விஷவாயுவைச் சுவாசித்து உடனே கீழேவிழுந்து மரித்துப்போகின்றன.

கரி அமிலவாயுவானது, இருட்டறைகள், நிலவறைகள், குழிகள், கெபிகள், சாக்கடைகள் ஆகிய இவைபோலொத்தவைக

ளுக்குள் விசேஷமாய்க் காணப்படும். மேலும் பாழ்ங்கிணறுகளுக்குள்ளும், ஆழமான கிணறுகளுக்குள்ளும் கரி அமிலவாயு சிலவேளை மிகுதியாயிருக்கிறதுண்டு. இதினிமித்தந்தான் சில சமயங்களில் அங்விதக் கிணறுகளுக்குள் திடீரென இறங்குகிற வர்களுக்கு மரணம் சம்பவிக்கிறது. ஜனங்கள் அப்படிப்பட்ட கிணறுகளுக்குள்ளாவது, வெகுகாலம் மூடப்பட்டிருக்கிற இருட்டறைகளுக்குள்ளாவது திடீரெனப் பிரவேசிக்கக்கூடாது. கரி அமிலவாயு இருக்கிறதோவென்று அறியும்பொருட்டு, ஓர் விளக்கைக் கிணற்றுக்குள் மெதுவாய் இறக்கிவிட்டால், அவ்வாயு சொற்பமாயிருக்குமானால் விளக்கு மங்கியெரியும்; அது மிகுத்திருந்தால் விளக்கு உடனே அணைந்துபோய்விடும். கரி அமில வாயு ஜீவனையும் எரிகிற நெருப்பையும் அழிக்கத்தக்கது.

போதுமான திறப்புகளற்ற அறைகளுக்குள் ஜனங்கள் நெருக்கமாய்க் கூடியிருக்கும்போது, அவ்வறைகளில் கரி அமில வாயு அதிகமாய் உற்பத்தியாகுமாகையால், அங்குள்ள ஜனங்கள் தலைநோவு ஆயாசமுதலிய சங்கடங்களை அடைவார்கள். அவர்கள் அவ்வறைகளைவிட்டு வெளியே வந்தவுடனே, சுத்தமான ஆகாயத்தை அவர்கள் சுவாசிக்க, அவர்களுக்கிருந்த தலைநோவு ஆயாசமுதலியவைகளெல்லாம் பறந்துபோய்விட, அவர்கள் உச்சாகத்தை அடைவார்கள். வெளியே உள்ள சுத்த ஆகாயம் உள்ளே பிரவேசியாதபடிக்குக் கதவு ஜன்னல்களை நன்றாய் அடைத்துக்கொண்டு, சிறு அறைகளுக்குள் நித்திரைசெய்கிற ஜனங்கள் மென்மேலும் தங்கள் சொந்த சுவாசத்தினால் விஷமாக்கப்படுகிற ஆகாயத்தை ஆக்கிராணிக்கிறதினால், சிலவேளை அவர்களுக்கு உயிர்ச்சேதம் சம்பவிக்கிறதுண்டு. இதற்கு எண்ணிறந்த திருஷ்டாந்தங்களிருக்கின்றன.

கரி அமிலவாயுவானது ஜீவஜெந்துக்களின் பிராணனுக்கு இவ்வளவு பெரிய மோசங்களை உண்டாக்கத்தக்கதானால், பூமியின் கண்ணுள்ள எண்ணிறந்த ஜீவகோடிகளின் சுவாசத்தினாலும், உலகமெங்கும் எரிகிற நெருப்பினாலும், ஓயாமல் உற்பத்தியாகிற அளவற்ற கரி அமிலவாயு, வெகு சீக்கிரத்தில் ஆகாயத்தையெல்லாம் முற்றிலும் விஷப்படுத்தி, சகல ஜீவஜெந்துக்களையும் மடியச்செய்யவேண்டுமே என்று சிலர் ஆக்ஷேபிப்பார்கள். ஆனால் சர்வவல்லமையுள்ள கடவுளுடைய ஞான

டும், தயையும், அவருடைய சகல கிரியைகளிலும் காணப்படுகிறதுபோல, இவ்விஷயத்திலும் வெகு தெளிவாய் வெளிப்படுகின்றன. இது எப்படி என்பதைப் பின்னாலே சொல்லப்படும் காரியங்களினால் தெரிந்துகொள்ளலாம்.

ஜீவஜெந்துக்கள் சுவாசிக்கிற ஆகாயத்தில் (Oxygen) பிராணவாயு (Nitrogen) உபபுவாயு என்ற இரண்டுவித வாயுகள் கலந்திருக்கின்றன. இவற்றில் பிராணவாயுதான் முக்கியமானது. அது ஜீவஜெந்துக்கள் ஜீவிப்பதற்கும், நெருப்பு எரிகிறதற்கும் ஆதாரமானது. அதில்லாவிட்டால் சகல ஜீவன்களும் மாண்டுபோம்; நெருப்பும் அணைந்துபோம். இந்தப் பிராணவாயு ஆகாயத்தில் ஐந்தில் ஒரு பங்குள்ளது. மற்ற நான்கு பங்கும் உபபுவாயுதான். பிராணவாயுவே முழுமையுமாக ஆகாயத்திலிருந்தால், ஜீவப்பிராணிகளின் சுவாச இயக்கமும் இரத்த ஓட்டமும் அதிவேகமாய்க் கதித்துச்செல்லும்; அவற்றின் இரத்தநாடிகள் மிகப் படபடத்து அடிக்கும்; சீக்கிரத்தில் அவைகள் மரித்துப்போம். மேலும் அப்போது ஓரிடத்தில் நெருப்புப்பற்றினால் அது எங்கும் பரம்பி, உலக முழுமையும் எரிந்துவிடும். ஆகையால் பிராந்தியின் காரத்தைத் தண்ணீராகக்கொண்டு தணிப்பதுபோல, பிராணவாயுவின் வேகத்தைத் தணிக்கும்பொருட்டு அது ஒரு பங்கும், ஒரு செயலுமற்ற உபபுவாயு நான்கு பங்குமாக ஞானமுள்ள சிருஷ்டிகர் சேர்த்திருக்கிறார்.

ஜீவஜெந்துக்கள் சுவாசத்தினால் ஆகாயத்தை உட்கொள்ளும்போது, அதிலுள்ள பிராணவாயுவானது இரத்தத்தோடு சேர்ந்து தேகமெங்கும் சென்று, சரீரத்தில் ஓயாமலுண்டாகிற விஷக்கழிவு பதார்த்தங்களை எரித்துப்போடுகின்றது. இவ்வாறு பிராணவாயு தேகத்தின் அசுத்தக்கழிவுகளை எரிக்கிறதினால், விஷவாயுவாகிய கரி அமிலவாயு உற்பத்தியாகி, சுவாசத்தின் வழியாய் வெளியே புறப்படுகின்றது. மேலும் கரி, விறகு, எண்ணெய் முதலியவைகள் பிராணவாயுவின் உதவியினால் எரிகிறதினாலும் கரி அமிலவாயு உற்பத்தியாகிறது. இவ்விதமாய் ஜீவஜெந்துக்களின் சுவாசத்தினாலும், நெருப்பு எரிகிறதினாலும் ஓயாமல் உற்பத்தியாகிற கரி அமிலவாயு ஆகாயத்தோடு சேர்ந்து அதை விஷமாக்குகின்றது. இப்படி இடைவிடாது ஆகாயத்தில் பெருகிற இவ்விஷவாயு எவ்விதத்திலாவது அப்போதைக்கப்போது நீக்-

கப்படாவிட்டால், வெகு சீக்கிரத்தில் ஆகாயமுழுமையும் விஷமாகி, சகல ஜீவஜெந்துக்களேயும் மடியச்செய்யுமென்பதற்குச சந்தேகமில்லே. ஆகையால் தயாபராகிய கடவுள் இதற்காகச் செய்திருக்கிற ஞானமுள்ள ஏற்பாடென்னவெனில்: ஜீவபிராணிகளின் சுவாசத்தினுல் உற்பத்தியாகிற கொடிய கரி அமிலவாயுவை, புல் பூண்டு விருக்ஷங்களுக்கு ஆகாரமாகக் கடவுள் ஏற்படுத்தியிருக்கிருர். நாம் பிராணவாயுவை உட்கொண்டு, நமக்கு விஷமாகிய கரி அமிலவாயுவை வெளியே விடுகிறேம். விருக்ஷங்களோ நமக்குக் கேடாயிருக்கிற கரி அமிலவாயுவை உட்கொண்டு, நமக்கு ஜீவனேயும் உசசாகத்தையும் கொடுக்கத் தக்க பிராணவாயுவை வெளியே விடுகின்றன. கரி அமிலவாயுவில், கரியும் பிராணவாயுவும் சேர்ந்திருக்கின்றன. பூண்டுகள் இராவிருட்டில் கரி அமிலவாயுவை உட்கொண்டு, பகலில் சூரிய வெளிச்சத்தின் உதவியினுல் அவ்வாயுவிலுள்ள கரியையும் பிராணவாயுவையும் வெவவேறுகப் பிரிதது, கரியைத் தமக்கு ஆகாரமாக வைத்துக்கொண்டு, பிராணவாயுவை வெளிவிடுகின்றன. ஆகையால் விருக்ஷங்களண்டையில் இருட்டுவேளேகளில் கரி அமிலவாயு அதிகமாயும், பகல் வெளிசசத்தில் பிராணவாயு மிகுதியாயுமிருக்கிறதிமித்தம், நாம் இராததிரிகாலங்களில் மரஙகளுக்குச் சமீபத்தில் வெகுநேரமிருந்தால் நமக்குச் சுகவீனமும் சோர்புமுண்டாகும். ஆனல் பகற்காலத்தில் நாம் விருக்ஷங்களின் நடுவேயிருக்கையில் நமக்குச் சுகமும் உச்சாகமும் உண்டாகிறதைக் காணலாம்.

---

## டையோனிசியஸ் என்னும் ராஜனேப் பற்றிய கதை.

ஐரோப்பாகண்டத்தின் தென்திசையிலுள்ள (Sicily) சிசிலித்தீவில் ராஜ்யபாரஞ்செய்துகொண்டிருந்த (Dionysius) டையோசினியஸ் என்றும் ஓர் குறுநிலமன்னனிருந்தான். அவன் அளவற்ற ஐசுவரியமுள்ளவனுயினும, ராஜசம்பத்தினுலும அதிகாரத்தினுலும் கிடைககத்தகும் இன்ப சுகானுபவங்களில் குனிறுக்கேனும் அவனுக்குக் குறைவில்லாதிருந்தும், தன் உள்ளத்தில் அவன் சமாதான சந்தோஷமற்றவனுகவே ஜீவித்துக்கொண்டிருந

தான். இந்த ராஜனுடைய சமஸ்தானத்திலிருந்து அவனை இடைவிடாது புகழ்ந்து கொண்டாடிக்கொண்டிருந்தவர்களில் ஒருவனாகிய (Damocles) தாமொக்கில்ஸ் என்பவன் இந்த ராஜனுக்கிருந்த விஸ்தாரமான ஐசுவரியம் அதிகாரம் முதலியவற்றைப்பார்த்து மயங்கி, ஒருநாள் அவ்வரசனைநோக்கி: "நீ எத்திசையிலும் புகழ்பெற்று வாழும் மன்னன். ஒப்பற்ற செல்வமும் சகலவித இன்பசுக சந்தோஷங்களும் உன் அரண்மனையில் எக்காலும் குடிகொண்டிருக்கப்பெற்ற உனக்கு நிகரான பாக்கியவந்தனை இவ்வையகம் கண்டிராது" என்றான். அதற்கு ராஜன் பிரத்தியுத்தரமாக அவனைப்பார்த்து: "நீ இவ்வாறு வியந்து மதுரவசனங்களினால் அலங்கரித்துக்காட்டிய என் அந்தஸ்தில் எனக்கிருக்கிற சந்தோஷம் இன்னதென்று அறிய உனக்கு மனமுண்டா? என் நிலைமைக்குள்ள சுகானுபவங்களை நீ ருசித்துப்பார்த்தறிய உனக்கு ஆசையிருக்கிறதா?" என்றான். அதற்கு டாமொக்கில்ஸ் தன் விருப்பத்தை வெளியிட, உடனே ராஜன் அவனை நவரத்னாலங்கிருத சுவர்ன்ன சிம்மாசனத்தின்பேரில் வீற்றிருக்கச்செய்து, சிறந்த ராஜவிருந்தொன்றை அவனுக்காக ஆயத்தம்பண்ணும்படிக் கட்டளையிட்டான். இதற்காக அதிவிநோதமாய் ஜோடித்த சித்திரகூட மண்டபமொன்றில் மகா அலங்காரமான பொன் வெள்ளித்தாளங்கள் கிண்ணங்கள் முதலிய விதம்விதமான பாத்திரங்களை ஏந்திய மேஜைகளைப் போடுவித்தான். அதிரூபலக்ஷணம்பொருந்திய பல வேலையாட்கள் அங்கே நின்று குற்றேவல்செய்யவும், இட்டக் கட்டளைக்கு எள்ளளவேனும் தாமதியாது அத்தியந்த பணிவாய்க் கீழ்ப்படியவும் நியமிக்கப்பட்டார்கள். சிறந்த பரிமளதயிலங்களும், வகைவகையான சுகந்தவாக்கங்களும், மதுரமான புஷ்பமாலைகளும் அளவில்லாமல் அங்கே கொண்டுவரப்பட்டன. இன்ப நுகர்ச்சிக்கிசைந்த அறுசுவை உணவுகள், வகைவகையான உசிதபோஜன பானாதிகள், மேஜையின்பேரில் எதேஷ்டமாய் நிறைந்திருந்தன. காதுக்கினிய மதுரகானங்களினால் மனதை ஆநந்தபரவசப்படுத்தத்தக்க பலவித சங்கீதவாத்தியக்காரர் பக்கத்தில் நின்றார்கள். இவ்வாறு சகலவித சந்தோஷங்களும் நிறைந்த அவ்விருந்து மண்டபத்தின் நடுவே வீற்றிருந்த டாமொக்கில்ஸ் என்பவன் ஆநந்தசாகரத்தில் அமிழ்ந்தினவனாய், இவ்வுலகத்தில் அரியபாக்கியங்களைப்பெற்று வாழும் மக்களுள் தானும் ஒருவனென்பதற்கு

ஐயமில்லையென்று எண்ணிக்கொண்டான். இவ்வண்ணமாய் அவன் சந்தோஷலாகிரிகொண்டிருக்குந்தருணத்தில் அவன் உயர அண்ணாந்துபார்த்து: அம்மண்டபத்தின் உச்சியிலிருந்து தன் தலைக்கு நேராக ஒரே ஒரு மயிரினால் பிணிக்கப்பட்டு, அதின் பலத்தினாலேயே தொங்கிக்கொண்டிருந்த கூருள்ள ஒரு வாளைக் கண்டான். அதை அவன் கண்டமாத்திரத்தில் பாதாதிகேச பரியந்தம் அவன் தேகத்தில் கொடிய நடுக்கமுண்டாயிற்று; சற்று முன் அவனுக்கிருந்த மட்டற்ற ஆநந்தம் முற்றிலும் அற்றுப் போயிற்று. பளீர்ப்பளீரென மின்னிக்கொண்டிருந்த அவ்வாளினால் எந்நிமிஷம் தன் பிராணனுக்கு அழிவுநேரிடுமோவென்ற கொடிய திகிலினால் தனக்கு முன்வைத்திருந்த அரிய உணவுகளில் ஒன்றையேனும் கொஞ்சமென்கிலும் எடுத்துண்ண அவனுக்கு மனம்பொருந்தவில்லை; மதுர சங்கீதவாத்தியங்களிலொன்றும் அவனுக்குச் சற்றேனும் இன்பங்கொடுக்கவில்லை. தானிருந்த மோசமான நிலையைவிட்டு நீங்க ஆசையுள்ளவனாய், அதிதீவிரமாய் தான் அணிந்திருந்த ஆபரணங்கள் புஷ்பமாலைகள் முதலியவற்றைப் பிடுங்கி எறிந்துவிட்டு, தான் உட்கார்ந்திருந்த ஆசனத்தைவிட்டுத் திடீரென எழுந்து டையோனிசியஸ் என்னும் ராஜனைநோக்கி: இவ்வளவான மனச்சஞ்சலத்தோடும் திகிலோடுங்கூடிய மகிமையும் சம்பிரமமுமான இந்நிலைமை எனக்கு வேண்டாம். அமைதலோடுகூடிய என் தாழ்ந்த நிலைமையிலே இருக்க விரும்புகிறேன். இதற்கு நீர் உத்தரவு கொடுக்கவேண்டுமென ஆவலுடன் பிரார்த்தித்தான். இந்த உபாயத்தினால் டையோனிசியஸ் ராஜன் தனக்கு அளவற்றவண்ணமாய் சகல ராஜசம்பத்துகளிருந்தும், தன் உள்ளத்தில் மெய்யான சந்தோஷசமாதானம் கிஞ்சித்துமில்லையென டாமோக்கில்ஸ் என்பவனுக்குத் தெளிவாய் விளக்கிக்காட்டினான்.

எவ்வித உயர்ந்த அந்தஸ்தினாலும், எம்மட்டான சம்பத்தினாலும் குற்றமுள்ள மனதிற்கு மெய்ச்சந்தோஷங் கிடையாதென்பதே இக்கதையின் கருத்து.

# ஐஸ்வரியவான்கள், ஏழைகள்

(117-வது பக்கத்தின் தொடர்ச்சி)

அப்படியானாலும் தங்கள் பொருட்களை லோகோபகாரார்த்தம் செலவிடுகிற தர்மசிந்தனையுள்ள ஐஸ்வரியவான்கள் சிலர் மாத்திரம் உண்டு; அவர்களால் தேசத்திற்கு அநுகூலம் உண்டென்று ஒத்துக்கொள்ளலாமேதவிர, பரோபகாரமென்கிற எண்ணம் அணுவளவேனுமின்றி எப்பொழுதும் தங்கள் காரியமே பார்க்கிறவர்களாயும், புதையல்காக்கும் பூதம்போலப் பணத்தைக் காத்துக் கால்துட்டு முதலாய்ச் செலவழியாமல் சுத்தலோபிகளாயுமிருக்கிற அநேகரால் தேசத்திற்கு வரும் நன்மையென்ன என்று கேட்டால், அவர்களாலும் மிகுந்த நன்மையுண்டென்று சொல்லலாம். ஒரு தனவான் எவ்வளவு தற்பொழிவுக்காரனாய் இருந்தபோதிலும், தன் பொருள் பிறர்க்குப் பயன்படாமல் தடுத்தல் கூடாது. ஒருவனுக்கு மாசம் ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது; இந்த வருமானத்தை நூறுபங்கு வைத்து, குடும்பத்துக்குப் பத்துரூபாய்விதம் பகிர்ந்துகொடுத்தால் அதனால் தேசத்தில் நூறு ஏழைக்குடும்பங்கள் பிழைக்கலாமே என்று நினைப்போம்; இது முழுத்தவறு. நூறு குடும்பங்களுக்குப் போதுமான அவ்வளவு ஆகாரத்தையும் அவன் ஒருவனே தின்றுவிட்டானானால் அப்பொழுது அப்படி நினைக்கலாம். "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" என்றபடி, அந்த ஸ்திதிமான் உண்பதும் உடுப்பதுமெல்லாம் ஒரு ஆளுக்குரிய அளவேயன்றி அதிகமில்லை. மற்றதெல்லாம் அவனுடைய வேலைக்காரர், கூலியாட்கள், தொழிலாளிகள், வர்த்தகர்கள் என்றிவர்கள் விஷயத்தில் செலவாகிறது. அவர்கள் அதைக்கொண்டு தங்களுக்குத் தேவையான அன்னவஸ்திர முதலானவைகளைச் சம்பாதித்து, தங்களையும் தங்கள் குடும்பங்களையும் காப்பாற்றுகிறார்கள். ஒருவேளை அந்த ஸ்திதிமான் இந்தக் குடும்பங்களை சவரட்சணை செய்யவேண்டுமென்கிற எண்ணம் கிஞ்சித்துமின்றி முற்றிலும் தன்காரியமே பார்க்கிறவனாயிருந்தபோதிலும் எவ்வகையாயாவது அவன் இவர்களைக் காப்பாற்றுகிறதற்குக் குறைச்சலில்லை. அவன் ஒரு பெரிய வீட்டைக் கட்டு

கிறதற்காவது, அதிவிசித்திரமான ஒரு வேலே செய்கிறதற்காவது, அல்லது அவனுக்குப் பிரீதியுள்ள வேறெந்த விஷயத்திற்காவது ஆயிரம் பதினாயிரம் ரூபாய் செலவிடுகிறான். அவ்வளவு திரவியமும் அந்த வேலேயில் சம்பந்தப்பட்ட அனேவருடைய குடும்பங்களுக்கும் உபயோகப்படுகிறது. ஆதலால் ஒரு ஐஸ்வரியவானுடைய திரவியத்தை எடுத்துப் பல குடும்பங்களுக்குப் பகிர்ந்துகொடுத்தால் எப்படியோ அப்படியே இதுவும் பயன்படுகிறது. ஆனல் ஒரு விததியாசமாத்திரமுண்டு; அதென்னவெனில், ஒருவனுடைய ஆஸ்தியை எடுத்துப் பலருக்குப் பகிர்ந்துகொடுத்தால அவர்களெல்லாரும சோம்பற் சகேரவாத்திகளாய் வீட்டில் குந்தியிருந்து, யாதொருவேலேயுஞ் செய்யாமல் பூமிக்குப் பாரமும், சோற்றுக்குத் தண்டமுமாய் ஜீவிப்பார்கள். இப்பொழுதோ அவ்வவர் தம்தம் கௌரவத்தை விடாமல் காத்துக்கொண்டு, வேலே செய்து மரியாதையாய் ஜீவனம்பண்ண வகையுண்டு. எப்படியானலும் இவவிருவகை நிலேமையிலும் தேசத்திலுள்ள உணவுப் பொருளகளின் மொத்த அளவு இதனல் ஏறுகிறதுமில்லே குறைகிறதுமில்லே.

பிசினிகளாயிருக்கிற வேறு சிலர் தங்கள் வருமானத்துக்குத் தக்க செலவுபண்ணுமல், "உடாதும், உண்ணுதும் தம்முடம்பு செற்றும்" பொருளேச்சேர்த்துக் குவிக்கிறார்கள். இப்படிக் குவித்துவைக்கும் திரவியமும தேசத்திற்குப் பயன்படுகிறது. எப்படியெனில், நல்ல அரசாட்சியும் நாகரீகமுமுள்ள நாடுகளில் பொன்னேயும வெள்ளியையும புதைத்துவைப்பார் அபூர்வம்; அப்படியே இத்தேசத்திலும் முன்னுள்ள அப்பழக்கம் நின்றுவிட்டதைப் பிரத்தியட்சமாய்க் காண்கிறோம். ஆதலால் பிசகுருதத்தில் எப்படிப்பட்ட பிசினறியும் தன் பணத்தைப் புதைத்துப் பத்திரப்படுத்தக் கருதாமல், அதினல் லாபம் அடையும்படி வட்டிக்கு விடுகிறான்; வட்டியும் முதலும்போக மேலாகிலும் லாபம் அடையலாமென்றெண்ணுகிற சமுசாரியோ, தொழிலாளியோ, வியாபாரியோ அந்தப் பணத்தைக் கடனகவாங்கி நிலஞ்சாகும்படி செய்யவாவது, ஏதாகிலும் தொழில்துறை நடத்தவாவது, வியாபாரமபண்ணவாவது ஆட்களே நியமித்து அவர்களுக்குச சம்பளம்கொடுக்கிறான. இந்தபபிரகாரம் அநதப் பணம் முயற்சியும்

சுறுசுறுப்புமுள்ள அநேகருடைய குடும்பங்களின் ஜீவனார்த்தத்துக்கும், தேசத்தில் தானியம், வஸ்திரமுதலிய பலபொருட்கள் மலிவாகிறதற்கும் ஏதுவாகிறது.

ஆதலால் ஐஸ்வரியவான்கள் மற்றவர்களைவிட இவ்வுலகத்தில் அதிகப் பங்குடையவர்களைப்போலக் காணப்பட்டாலும், அது முழுமையும் அவர்களே புசிக்கிறதில்லையென்றும், அவரவர் பொருளை அவரவர் இஷ்டப்படி செலவழிக்கவும் சேர்த்துவைக்கவும் இடங்கொடுக்கிறதே தேசநன்மைக்கு அநுகூலமென்றும் விளங்குகிறது.

லோகத்திலே ஏழைகள் துன்புற்று வருந்துவதற்கு ஐஸ்வரியவான்களே முக்கிய காரணமென்று நினைப்பது பெரிய பிசகென்பது பின்வரும் கதையினால் தெளிவாகும்.

ஓர்காலத்தில் தேகத்திலுள்ள அவயவங்களெல்லாம் வயிற்றின்மேல் பொறாமைகொண்டு, தாங்கள் வருந்தி உழைக்க அது ஒருவேலையுஞ் செய்யாமல் சும்மாயிருந்து தங்கள் பிரயாசத்தினால் விளையும் பலன்முழுமையும் அநுபவிக்கிறதென்றும், அதற்குப்பதிலாக அது ஒன்றும் செய்கிறதில்லையென்றும் முறையிட்டு, இனிமேற்பட நம்மில் ஒருவரும் ஒருவேலையும் செய்யப்படாது, இந்தச் சோம்பேறி அப்புறம் என்னசெய்கிறது பார்ப்போம் என்று சொல்லி, எல்லாம் ஒன்றுசேர்ந்து கட்டுப்பாடுபண்ணிக்கொண்டன. கால் ஓரிடத்திற்கும் போகமாட்டேனென்று இருந்துகொண்டது; கை இலைமுன்னிருக்கும் சாதத்தைக்கூட எடுத்து வாய்க்குக் கொண்டுபோகமாட்டேன் என்று மறுத்துவிட்டது; மூக்கு யாதொன்றையும் மூகரேன் என்றது; கண் ஒருபொருளையும் பார்க்கமாட்டேனென்று இமையை மூடிக்கொண்டது; காதானது போஜனத்துக்கு அழைக்கும் சத்தத்தை முதலாய்க் கேட்கமாட்டேன் என்று சாதித்துவிட்டது; இப்படியே மற்ற அவயவங்களும் அதனதன் தொழிலைச் செய்யாமல் சும்மாயிருந்தன. கொஞ்சநேரம் சென்றபின் வயிற்றிலுள்ள ஆகாரமெல்லாம் அற்றுப்போக பசி எழும்பிற்று; ஆயாசம் பிறந்து சரீரத்திலுள்ள அவயவங்களெல்லாம் களைத்துவருந்தின. கைகால் அயர்ந்து, கண்ணிருண்டு, காதடைத்து, நாவறண்டு, தேகமாதியந்தமும் பலக்ஷயமாயின.

அப்பொழுது வயிறானது மற்ற அவயவங்களைப்பார்த்து: புத்தியீனர்களே! இப்போ உங்களுக்கு புத்திவந்ததா? பேருக்கு நீங்கள் எனக்காக உழைக்கிறதுபோலிருந்தாலும், வாஸ்தவத்தில் நீங்கள் உங்களுக்காகவே உழைக்கிறீர்களென்று தெரிந்துகொள்ளாமற் போனீர்களே. நீங்கள் தேடும் ஆகாரத்தை நான் ஒருவனே தின்றுவிடுகிறேனென்று நினைப்பது பிசகு, உங்களுக்கு உபயோகமாகும்படி நான் அதை ஜீரணிக்கச்செய்து அன்னசாரமாக்குகிறேன். அந்தச் சாரம் இரத்தமாக மாறி, நாடிகள் வழியாய்ச் சென்று, உங்கள் ஒவ்வொருவரையும் போஷித்து வளர்க்கிறது. கடைசியில் உங்களெல்லோருக்கும் ஒப்பந்தம எனக்கும் அதில ஒரு பாகம் கிடைக்கிறதேயன்றி, நான் அதிகம் அநுபவிக்கிறதொன்றுமில்லை. இதை அறியாமல் நீங்கள் வீணெண்ணம் கொண்டீர்களென்று கடிந்துகொண்டது.

இதனால் தேசத்தில ஒவ்வொரு நிலைமையிலுள்ளவர்களாலும் ஒவ்வொருவருக்குப் பிரயோசனம் உண்டென்றும், ஆகவே ஒருவர்பேரில் ஒருவர் பொறாமைகொண்டு குறைகூறவாவது, வஞ்சித்துக் கெடுக்கவாவது நினையாமல், அவரவர் தம்தம் கடமையைச் சரிவரச் செய்துவருவதே நம்முடைய வாழ்வுக்கு அநுகூலமென்றும் திருஷ்டாந்தப்படுகிறது.

சில சமயங்களில் செல்வர்களிடத்திலுண்டாகும் மிதமிஞ்சிய பெருமையையும பிசினித்தனத்தையும் பார்க்கும்போது, எரிச்சல் அடைந்து இந்த மூடர்களிடத்திலுள்ள திரவியம நம்மிடத்திருந்தால் நாம எவ்வளவு பிரயோஜனமாய்ச் செலவிடலாம் என்று சிந்திப்போம. நம்மிடத்தது திரவியமிருந்தால் நாம் அப்படிச் செய்வோமென்பதற்கு நல்ல குறிப்பியாதெனில், இப்பொழுது நமக்குள்ளதில நம்மாலானமட்டும் பிறர்க்கு உதவிசெய்து வாழ்வதேயாம். ஒவ்வொருவருக்கும் அவரவர்க்குரிய கடமைகளும் சலாக்கியங்களும உண்டு. கடைசியில் கடவுளானவர் அவரவர்க்கு அளித்த அளவின்படி கணக்குக்கேட்பாரேயன்றி அதிகம் கேளார். ஆதலால அவர் நம்மை எந்த நிலைமையில்வைக்கச் சித்தமாகிறாரோ அந்த நிலைமையில் திருப்தியாயிருந்து, நாம் செய்யவேண்டியவைகளை நம்மாலியன்றமட்டும் சரிவரச் செய்து, எப்பொழுதும சந்தோஷமாய் வாழ்வதே நமது இகபர க்ஷேமத்துக்கு ஏற்றவழியாம்.

## விவேக விர்த்தி.

### ௫. அதிகாரம்

ரத்நம்—"சுந்தரம், நேற்று நீ எனக்குக் குறித்தநேரத்திற்குச சற்றேனும் பிந்திப்போகாமல், இதோ நான் சரியான நேரத்தில் உன்னிடத்திற்கு வந்துவிட்டேன பார், நான் உன வீட்டுவாசற்படி ஏறப்போகையில்தான் அடுத்த வீட்டிலுள்ள கடிகாரம ஆறு அடித்தது."

சுந்தரம்—"ஆம் ரத்நம், நீ வெகு திட்டமாய் வந்திருக்கிறாய், நாம் செய்யவேண்டிய வேலைகளை அததற்குக் குறித்தநேரத்திலே திட்டமாய்ச் செய்துமுடிக்கிற வழக்கம நமக்குண்டாயிருந்தால், அதினால் நமக்குப் பெரிய நன்மைகள் விளையும. நல்லது ரத்நம், நீ இந்த அறைக்குள் வந்து உட்காரு; இதற்குள் ஒருவரும் வரமாட்டார்களாகையால் நமக்கு இஷ்டமான காரியங்களைப் பற்றி நாம் இருவரும் இங்கே தாராளமாய்ச் சமபாஷித்துக் கொண்டிருக்கலாம."

ரத்நம்—"இதோ உன் மேஜையின்பேரில் பலவிதமான பொருட்களை வைத்திருக்கிறாயே, இவைகள் என்னத்திற்கு? நீ எனக்கு யோசிக்கக் கற்றுக்கொடுக்கையில இவைகள உபயோகப்படுமோ?"

சுந்தரம்—"இவைகள் என்னத்திற்கென்பது கொஞ்சநேரத்திற்குள் உனக்குத் தெரியவரும். ஒரு சிறு குழந்தையானது அறிவடையத் துவக்குகையில், முதலாவது அம்மா அப்பா முதலாகிய தனக்குச் சமீபத்திலுள்ள ஆட்களுடைய பேர்களையும், நாய் பூனைமுதலிய சாதாரண பொருட்களுடைய நாமங்களையும் கற்றுக்கொள்ளும். அதற்குப்பின்பு அவ்வாட்களுடைய குணங்களையும், அப்பொருட்களுடைய தன்மைகளையும்பற்றி அறியத் துவக்கும். பிள்ளையானது வெகு சீக்கிரத்தில் அப்பாவும அம்மாவும் நல்லவர்களென்றும், நாய் குலைக்குமென்றும், குருவி பறக்குமென்றும், தெரிந்துகொள்ளும. பிள்ளைகளுடைய படிப்பின் துவக்கம் இதுவே. நீ இவை எல்லாவற்றையும, பின்னும் வேறு அநேக காரியங்களையும முன்னமே அறிந்திருக்கிறபடியால், நான

உன்னை ஒரு சிறுபிள்ளையைப்போல் பாவித்து நடத்தமாட்டேன்; நீ பார்த்திருக்கிற பொருட்களில் எதையாகிலும் நீ கண்டிக்ஷணமே அதின்பேரை நீ சொல்லக்கூடுமே."

ரத்நம்—"ஆம், அது நிஜந்தான்; ஆனால் பொருட்களின் பேரை அறிந்திருக்கிறதினால் என்ன பிரயோஜனம்? அது எனக்கு யோசிக்கக் கற்றுக்கொடுக்குமா?"

சுந்தரம்—"பொருட்களின்பேரை அறிந்திருப்பது யோசிக்கக் கற்றுக்கொடாது; ஆகிலும் அது அறிவுவிர்த்திக்கு மிகவும் அவசியமான அநுகூலமென்பதற்குச் சந்தேகமில்லை. நாம் பொருட்களின் பேர்களை அறிந்திராவிட்டால் நாம் என்னசெய்யக்கூடும்? ஒரு வஸ்துவானது மற்றொரு வஸ்துவை நாம் சம்பாதிப்பதற்கு உதவியாயிருக்கிறதில்லையா? திருஷ்டாந்தமாக: ஒரு நாற்காலியானது ஒரு புஸ்தகமாகமாட்டாது; ஆகிலும் புஸ்தகப்பெட்டியின் மேல்தட்டில் கைக்கு எட்டாத உயரத்தில் வைத்திருக்கிற ஒரு புஸ்தகத்தை எடுக்கவேண்டுமென்றால் அதற்காக நாற்காலியின்பேரில் ஏறிக்கொண்டால் அநுகூலமாயிருக்குமல்லவா? ஏறுவதற்கு நாற்காலிமுதலியதொன்றுமில்லாவிட்டால் வாசிப்பதற்கு அப்புஸ்தகம் நமது கைக்குவருமவிதம் எப்படி? இவ்விதமாகவே பொருட்களின்பேர்களை அறிந்திருப்பது நாம் அவற்றைப்பற்றி யோசிப்பதற்கும் பேசுவதற்கும் உதவியாயிருக்கிறது. யோசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டுமென்றால், நீ முதலாவது செய்யவேண்டியதென்னவெனில்: பொருட்களின் தன்மைகளை அல்லது குணங்களைப்பற்றி இப்பொழுது உனக்குத் தெரிந்திருக்கிறதைப் பார்க்கிலும் அதிகமாயும் திட்டமாயும் அறிய நீ பிரயாசப்படவேண்டும். பொருட்களின் குணம் அல்லது தன்மை என்றால் என்னவெனில்: நம்முடைய தாய்தந்தைகளின் குணம் நமதுபேரில் அன்பாயிருப்பதும், நமக்கு நன்மைசெய்வதுந்தான்; நாயினுடைய தன்மை குலைக்கிறதும், பக்ஷியின்தன்மை பறக்கிறதுந்தான்; நான் சொல்லுகிறது உனக்கு விளங்குகிறதா?"

ரத்நம்—"ஆம், இதெல்லாம் எனக்கு நன்றாய் விளங்குகிறது."

சுந்தரம்—"இதோ இக்கத்தியிருக்கிறதே, இதின் குணங்களென்னவென்று ஒருவன் என்னிடத்தில் கேட்டால், அது பளுவாயும், கூர்மையாயும் இருப்பதால், அதின் குணங்கள் பலமும் கூர்மையும் என்பேன். இனிமேல் பொருட்களின் தன்மைகளை நீதானே

கண்டுபிடித்து எனக்குச் சொல்லவேண்டும். பொருட்களின் தன்மைகளைக் கண்டுபிடிப்பதற்கு முதலாவது அவற்றைப்பற்றி நீ நன்றாய் யோசிக்கவேண்டியது அவசியமான காரியம். இது உன் ஞாபகத்திலிருக்கட்டும். நல்லது, இதோ இருக்கிற இந்தப் பொருள் என்னவென்று எனக்குச் சொல்லு."

ரத்நம்—"இது ஒரு இரும்புத்துண்டு; வேறென்ன?"

சுந்தரம்—"நல்லது, இதை உன் கையில் எடுத்துக்கொண்டு, அதைப்பற்றி நீ யோசித்துப்பார்த்து அதின் தன்மைகளை எனக்குச் சொல்லு."

ரத்நம்—"அதைப்பற்றி நான் என்ன யோசிக்கிறது? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. அது ஒரு துண்டு இரும்புதான்; இதைத்தவிர அதைப்பற்றி ஒன்றையும் நான் யோசிக்கக்கூடவில்லையே."

சுந்தரம்—"அப்படியா? நல்லது, உன் விரலினால் அதைத் தொட்டுப்பார். அது எவ்விதமாய்த் தோன்றுகிறதென்று சொல்லு."

ரத்நம்—"அது கடினமாய்த் தோன்றுகிறது."

சுந்தரம்—"அது கடினமாய்த் தோன்றுகிறதென்கிறாயே! உன் கருத்தென்ன?"

ரத்நம்—"நான் அதை உனக்கு எப்படி விளக்கிக்காட்டுகிறது? நீ நல்ல கேள்விகளைக்கேட்கிறாயே, இவ்விரும்புத்துண்டை என் விரலினால் அமுக்கும்போது விரல் அதில் பதிய அது இடங்கொடுக்கவில்லை; இதுதான் என் கருத்து."

சுந்தரம்—"வெகுநேர்த்தி! ரத்நம்! நீ வெகு திட்டமாய் உன் கருத்தை விளக்கிக் காட்டிவிட்டாயே. நல்லது, இந்த இரும்புத் துண்டைத்தவிர வேறு ஏதாகிலும் ஒரு கடினமான பொருளை நீ அறிந்திருந்தால் அதை எனக்குச் சொல்லு."

ரத்நம்—"கடினமான பொருள்கள் அநேகம் எனக்குத் தெரியும்; இந்த மேஜை கடினமான வஸ்து. தரை, சுவர், கதவு, பின்னும் அநேகம் பொருட்கள் கடினமான வஸ்துக்கள்தான்."

சுந்தரம்—"நல்லது, இந்த மெழுகு உண்டையைப்பார். இதை நீ தொட்டுப்பார்த்து அது எப்படித் தோன்றுகிறதென்று சொல்லு."

ரத்னம்—"இது மிருதுவாயிருக்கிறது. நான் இதைக் கிள்ளினால் என் விரல்கள் அதில் லகுவாய்ப் பதிகின்றன; என் விரல்களின் குறியை அதில் காணலாம்."

சுந்தரம்—"பொருட்களைப் பார்த்தக்ஷணமே இது கடினமானது, இது மிருதுவானது என்று நாம் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமான காரியம். கொஞ்சக்காலத்திற்குமுன் நான் ஒரு ஊருக்குப் பிரயாணமாய்ப்போகையில் ஒரு சிறிய காட்டாற்றைக் கடக்கவேண்டியிருந்தது. அவ்வோடைக்குச் சமீபித்த தரையானது கடினமாகத் தோன்றினதினால், ஆற்றின் கரையினின்று நான் தாண்டி அத்தரையின்பேரில் குதித்தபோது, என் கால்களிரண்டும் முழங்கால்பரியந்தம் மண்ணுக்குள் பதிந்துகொண்டன. வெளிப்பார்வைக்குக் கடினமானதாகத் தோன்றின அத்தரை மிருதுவான களிமண்ணுள்ளதாயிருந்ததினால் அப்படிச் சம்பவித்தது."

ரத்னம்—ஓகோ! உன் கால்கள் அவ்வளவுதூரம் மண்ணுக்குள் பதிந்துகொண்டனவா? நீ பெரிய தப்பிதஞ்செய்தாயே? நல்லது, அவ்விரும்புத்துண்டைப்பற்றி நாம் பேசவேண்டியதெல்லாம் ஆயிற்று?

சுந்தரம்—"இல்லை, யோசித்துப்பார்த்து அதின் தன்மைகளில் இன்னும் எதையாகிலும் நீ சொல்லக்கூடுமா? நீ அதை மறுபடியுந் தொட்டுப்பார்."

ரத்னம்—"அதைத் தொடும்பொழுது அது கொஞ்சம் குளிர்ச்சியாகத் தோன்றுகிறது."

சுந்தரம்—"குளிர்ச்சியாகத் தோன்றுகிறதென்றால் என்ன?"

ரத்னம்—"என் கையில் ஒருவிதமான உணர்ச்சியுண்டாகிறது; அது இப்படிப்பட்டதென்று விவரித்துச்சொல்ல எனக்குத் தெரியவில்லை."

சுந்தரம்—"அதைப்பற்றி நீ நன்றாய் யோசித்துப்பார்; அது குளிர்ச்சியாயிருக்கிறதென்று நீ சொல்லும்பொழுது உன் கருத்தென்னவென்று எனக்கு விளக்கிக்காட்டக் கூடியமட்டும் பிரயாசப்படு. மறுபடியும் நீ அதைத் தொட்டுப்பார்த்தபின்பு யோசி."

ரத்நம்—"இவ்விரும்புத்துண்டைத் தொடுகிறதினாலுண்டாகிற உணர்ச்சியானது குளிர்ந்த ஜலத்தினாலுண்டாகும் உணர்ச்சிக்குக் கொஞ்சம் ஒத்திருக்கிறது. அவ்வுணர்ச்சி மிகவும் சொல்பமாய் எனக்குள் குளிர் நடுக்கத்தை உண்டாக்கத்தக்கதுபோல இருக்கிறது."

சுந்தரம்—"ரத்நம்! நீ வெகு நேர்த்தியாய் உன் கருத்தை விவரித்துக் காட்டிவிட்டாய், நீ கொஞ்சக்காலத்திற்குள்ளாக நன்றாய் யோசனைசெய்யத்தக்க விவேகியாகிவிடுவாய் என்று எண்ணுகிறேன். இரும்புத்துண்டைப்பற்றி எனக்குள் அது மிகவும் சொல்பமாய்க் குளிர்நடுக்கத்தை உண்டாக்குகிறதுபோல் இருக்கிறதென்றாயே; ஏதாகிலும் சூடான ஓர் பொருளைப்பற்றி அது எப்படித் தோன்றுகிறதென்று ஒருவன் உன்னைக் கேட்டால், 'என் விரலை அதினின்று (சூட்டினிமித்தம்) திடீரென்று தூரமாய் இழுத்துக்கொள்ளச்செய்கிறது' என்பாயோ? இது வெகு நேர்த்திதான். பொருட்களின் தன்மைகளை நன்றாய் அறிந்திருப்பது நாம் அப்பொருட்களைப்பற்றி யோசிப்பதற்கும் சம்பாஷிப்பதற்கும் மிகவும் உதவியாயிருக்கிறதென்று உனக்குத் தெரிகிறதா? மிகவும் குளிர்ச்சியான அல்லது அதிகச் சூடான ஒரு பொருளைப்பற்றி நாம் வேறொருவனிடத்தில் பேசவேண்டியிருந்தால், அது குளிர்ந்த ஜலத்தை அல்லது பனிக்கட்டியைப்போலக் குளிர்ந்திருக்கிறதென்றாவது, அல்லது அது நெருப்பைப்போல சூடுள்ளதாயிருக்கிறதென்றாவது நாம் சொன்னால், உடனே அவன் காரியத்தை நன்றாய்க் கிரகித்துக்கொள்ளுவான். நல்லது, நாம் இப்போது வேறு சில பொருட்களைப்பற்றிச் சிந்திப்போமாக. இதோ இந்த ஈயக்குண்டைப்பார்; இது எப்படிப்பட்ட பொருளென்று எனக்குச் சொல்லு."

ரத்நம்—"என் கையில் அதை எடுக்கும்பொழுது, அது என் கையைச் சற்றுக் கீழே அமுக்குகிறதுபோலிருக்கிறது; அது கனமாய்த் தோன்றுகிறது."

சுந்தரம்—"இப்பொழுது இந்தக் கார்க்குத்துண்டை (நெட்டி, கிடைச்சி)க் கையில் எடுத்துப்பார்; இது எப்படித் தோன்றுகிறதென்று சொல்லு."

ரத்நம்—"இது என் கையைக் கீழே அமுக்கவில்லை. இது இலேசான பொருள்."

சுந்தரம்—"ஆகையால் பொருட்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டிருக்கின்றனவென்று தெளிவாய்த் தோன்றவில்லையா? ஒன்று கடினமானதும், மற்றொன்று மிருதுவானதும், ஒன்று கரங்கையானதும, மற்றொன்று குளிர்ச்சியானதும், ஒன்று கனமானதும், மற்றொன்று இலேசானதுமாக வஸ்துக்கள் பல பேதப் பட்டிருக்கின்றன. நான் முன்னே உனக்குச் சொன்னபிரகாரம் ஒவ்வொரு பொருளும் தன்தனக்குரிய விசேஷித்த தன்மைகளை உடைத்தாயிருக்கிறது. பொருட்களுக்குரிய சரியான தன்மைகளை மனிதர்கள் அறிகிறதினால்தான் அவர்கள் அப்பொருட்களை அநேகவிதமாய்ப் பிரயோஜனப்படுத்த ஏது உண்டாகிறது."

ரத்நம்—"ஒரு வஸ்து கனமுள்ளது அல்லது மிருதுவானது என்றாவது, அது கனமுள்ளது அல்லது இலேசானது என்றாவது நாம் அறிகிறதினால் எப்படி நாம் அவ்வஸ்துவைப் பிரயோஜனப் படுத்தக்கூடும்?"

சுந்தரம்—"நான் இதை உனக்கு விளக்கிக்காட்டுகிறேன். பொருட்களைப்பற்றிய சரியான அறிவுதான் நாம் அநுபவிக்கிற சகல சுகசவுக்கியங்களுக்கும் ஆதாரமானது. எப்படியென்றால், போஜனம், வஸ்திரம, நெருப்பு, வீடுமுதலிய பொருட்கள் நமக்கு மிகவும பிரயோஜனமுள்ளவைகள் அல்லவா? நல்லது, போஜன பதார்த்தங்களின் சரியான தன்மைகளை அறியாமல் நாம் அவற்றை உட்கொள்ளுவோமென்றால், அதினால் நமது சுகத்திற்கும் ஜீவனுக்கும் மோசங்கள் சம்பவிக்கமாட்டாதா? போஜனபதார்த்தங்களின் தன்மையை நாம் அறிகிறதினால்தான் இது பிரயோஜனமுள்ளது, இது தீங்குள்ளதென்று நாம் சொல்லுவதற்கு இடமுண்டாயிருக்கிறது. மனுஷன் புல்லைச் சாப்பிடுவானா? அல்லது மாட்டுக்கு மாம்சததைப் போடலாமா?"

ரத்நம்—"உன் கருத்து இன்னதென்று இப்பொழுது எனக்கு நன்றாய் விளங்குகிறது."

சுந்தரம்—"மேலும் வஸ்திரங்கள் நமக்கு மிகவும் அவசியமானவைகளாய் இருக்கின்றனவே. பொருட்களின் சரியான தன்மையை நாம் அறிகிறதினால், தகுதியான வஸ்திரங்களை நாம் சம்பாதித்துக்கொள்ள இடமுண்டாயிருக்கிறது. பருத்தினால் புடவைக்குப் பதிலாகக் கடுதாசி அல்லது இலைகளை நாம் தரிப்போ

மானல் அதினல் நமக்கு அடிக்கடி எவ்வளவு தொந்தரவு நேரி டும்? மேலும் மிகுந்த குளிர்காலத்தில் பருத்திநூல் அல்லது பட் டுநூல் புடைவைகளையும் அதிக உஷ்ணகாலத்தில் பிளானல் அல்லது கம்பளத்துணிப் புடைவையையும் நாம் உடுத்தினல் எப் படியிருக்கும்? பின்னும் நமக்கு நெருப்பு அவசியமான பொரு ளல்லவா? நாம் வைக்கோலைக்கொளுத்தி நெருப்புண்டாக்கி, விற குக்குப் பதிலாகக் கற்களை நாம் உபயோகித்தால் நெருப்பு எரி யுமா? விறகின்தன்மை நமக்குத் தெரிந்திருக்கிறதினல் நமக்கிஷ் டமானபோது அதைப் பிரயோகித்து நெருப்புண்டாக்கி எவ்வ ளவுநேரத்திற்கு அவசியமோ அவ்வளவுநேரமும் அது எரிந்து கொண்டிருக்கும்படி செய்ய நமக்கு சக்தி உண்டாயிருக்கிறது."

ரத்நம்—"வெகுநேர்த்தி! நீ முன்சொன்ன காரியம் இப்பொ ழுது எனக்கு எவ்வளவு தெளிவாய் விளங்குகிறது! இவ்வளவு தெளிவான காரியம் முன்பு எனக்கு விளங்காமல்போனது எனக்கு ஆசரியமாயிருக்கிறது."

சுந்தரம்—"இப்படிப்பட்ட காரியங்களைப்பற்றி நீ இதற்கு முன் சிந்தியாததினல் அவைகள் உனக்கு விளங்கவில்லை. நல் லது, கடைசியாக; வீடுகள் நமக்கு மிகவும் பிரயோஜனமுள்ள வைகளல்லவா? பொருட்களின் சரியான தன்மைகளை நாம் அறியா விட்டால், சவுக்கியமான வீடுகளை நாம் கட்டுவதற்கு இடமிராது. பச்சைமண்ணினல் சுவர்களைக் கட்டினல் அவைகள் மழைகா லங்களில் மிகவும் ஈரமுள்ளவைகளாயும், உஷ்ணகாலத்தில் வெ டிப்புள்ளவைகளாயும் போம். மேலும் வீடுகளுக்கு ஓடுமுத லியவற்றைக்கொண்டு மேற்கூரை போடாமல், கடுதாசிகளை அல் லது துணிகளைக்கொண்டு வீடுகளை மூடினல் ஒரே ஒரு பலத்த மழை பெய்யுமானல் அவ்வீடுகளுக்குள் வாசம்பண்ணுகிறவர்க ளுக்கு எப்படியிருக்கும்?"

ரத்நம்—"சுந்தரம்! நீ எடுத்துக்காட்டிய வெகு நேர்த்தியான இத்திருஷ்டாந்தங்களினல் பொருட்களின் தன்மைகளை சரியான படி நாம் அறியவேண்டியது மிகவும் அவசியமானகாரியமென் பது இப்பொழுது என்மனதில் நன்றாய்ப் பட்டிருக்கிறது."

சுந்தரம் — "இவ்விஷயத்தில் ஒரு முக்கியமான காரியத்தை நான் உனக்குச் சொல்லவேண்டும். நீ நன்றாய்க் கவனஞ்செலுத்

தாமல் பொருட்களை மேல்பார்வையாகப்பார்த்தால் நீ அவைக ளின் தன்மைகளை அறிந்துகொள்ள ஏதுவிராது. ஆனால் நீ அவற் றைக் கூர்ந்து கவனித்து அவற்றைப்பற்றி நன்றாய் யோசனைபண் ணிப் பார்ப்பாயானால், அவைகளுக்குள்ள தன்மைகளில் முன் உனக்குக் கொஞ்சமென்கிலும் தென்படாதிருந்த அநேகம் பின்பு உனக்குத் தெளிவாய் வெளிப்படுவதைப்பார்த்து நீயே ஆச்சரி யப்படுவாய்."

ரத்நம்—"அப்படியா? ஆனால் முன் நான் ஒருக்காலும் பார்த் திராத பொருட்களின் தன்மைகளை நான் கண்டுபிடிக்கும் வித மெப்படி?"

சுந்தரம் — "அது எப்படியென்றால்: பார்த்தல், கேட்குதல், மோர்தல், ருசித்தல், பரிசித்தல் (தொடுதல்) ஆகிய ஐம்புலன் களைச் சரியாய்ப் பிரயோகிக்கிறதினாலும், மனதில் நன்றாய் யோ சனைசெய்து பார்க்கிறதினாலும், அநுபவமாகப் பரீக்ஷைகளைச் செ ய்து பார்க்கிறதினாலும் பொருட்களுடைய தன்மைகளைக் கூடிய வாறு நாம் அறிந்துகொள்ளலாம். நல்லது, இப்பொழுது நேர மாய்விட்டதினால் நமது சம்பாஷணையை இம்மட்டில் நிறுத்து வோம்; நாளை இந்நேரத்திற்கு நீ இங்கே வந்தால் நாம் மற்றக் காரியங்களைப்பற்றிப் பேசலாம்."

## மரங்களைக் காப்பாற்றுவதற்கேற்ற வகை.

(Major H. T. Forbes.) மேஜர் போர்ப்ஸ் என்னும் ஒரு எஞ்சினீர் மரங்களைக் காப்பாற்றுவதற்கு ஓர் நூதனவகையைக் கண்டுபிடித்து, அதற்காகத் துரைத்தனத்தாரிடத்தில் அதிகார உரிமைப்பத்திரம் ஒன்றைப் பெற்றிருக்கிறார். இவர் கண்டுபிடி த்த உபாயதினால் மரங்களை உட்கிப்போகாதபடிக்கும், ஜலத் தினால் சேதமடையாதபடிக்கும், செல் (கறையான்) முதலிய பூச்சிகளினால் அழிக்கப்படாதபடிக்கும் பாதுகாக்கலாம். இவ் வுபாயம் என்னவெனில்: (Sulphate of copper.) மயில்துத் தத்தை நன்றாய்ப் பொடித்து, அதை நல்லெண்ணெய் தேங்காயெ ண்ணெய் முதலிய தாவரச எண்ணெய்களில் ஒன்றில் கரைத்து,

இந்துத்த எண்ணெயைக்கொண்டு மரங்களை நன்றாய்ப் பூசினால் அம்மரங்கள் உட்கிப்போகமாட்டாவென்றும், தண்ணீரினாலாவது, செல்லு முதலிய பூச்சிகளினாலாவது சேதமடையமாட்டாவென்றும பலபரீக்ஷைகளின்பேரில் தெரியவந்திருக்கிறது. மயில்துத்த எண்ணெயினால் நன்றாய்ப் பூசப்பட்ட மாம்பலகைகளைச் செல்லுகள் (கறையான்கள்) மிகுதியாயிருந்த ஒரு தோட்டத்திற்குள் இரண்டு வருஷகாலமட்டும் போட்டிருந்தது. அவற்றோடுங்கூட மரங்களைக் காப்பாற்றத்தக்க வேறுவித மருந்துகளினாலும பூசபபட்ட வேறு பலகைகளை அததோட்டத்தில் போட்டிருநதது. அந்த எண்ணெயினால் பூசப்பட்ட பலகைகள் கறையான்கள் குவித்த மண்ணினால் வெகுதூரம் மூடப்பட்டிருந்தும், அவற்றில் ஓர் பலகையாகிலும் அப்பூச்சிகளினால் ஏற்றென்கிலும் சேதப்படாமல் அவையெல்லாம் புதுப்பலகைகளைப்போலவே காணப்பட்டன. ஆனால் மற்றவகை மருந்துகளினால் பூசப்பட்ட பலகைகளில் சில கொஞ்சமாகவும், சில அதிகமாகவும், மற்றவை முற்றிலுமாகவும் பூச்சிகளினால் அழிக்கப்பட்டுப்போயிருந்தன. பாஷாணத்தினால் பூசப்பட்ட மரம்மாத்திரம் தப்பிக்கொண்டது. ஆகிலும் பாஷாணம் மயில்துத்தத்தைப்பார்க்கிலும் அதிகக் கிரயமுள்ளதாகையாலும், அது கொடிய விஷபதார்த்தமாகையாலும், மயில்துத்தப் பக்குவமே மரங்களைக் காப்பாற்றுவதற்கு யாவரும் வழங்கத்தக்க உத்தமமானதென்று தோன்றுகிறது. ஒரு சமயத்தில் ஜாதிக்காய்ப் பலகையொன்றைப் பாதிவரையில்மாத்திரம் மயில்துத்த எண்ணெயில் பத்துநாள்பரியந்தம் முக்கிவைத்திருந்து, பின்பு அதையெடுத்து ஒரு கறையான் புத்துக்குள் சில மாசக்காலம் வைததிருந்ததில், அவ்வெண்ணெய்படாதப் பாதிப்பலகையானது முற்றிலும் கறையானால் அழிக்கப்பட்டுப்போயிற்று. ஆனால் மற்றப் பாதிப்பலகையோ யாதொரு சேதமுமடையாமலிருந்தது. மேஜர் போர்ப்ஸ் என்பவர் தாம் நூதனமாய்க் கண்டுபிடித்த இவ்வுபாயத்தை இந்திய துரைத்தனத்தார் செவ்வையாய்ப் பரிக்ஷைசெய்து பார்க்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்திருக்கிறார்.

## பாபிலோன் நகரத்தின் சுவர்கள்.

பூர்விகத்திலிருந்த பாபிலோன் நகரத்தின் கோட்டைச்சுவர்கள் மகா அதிசயமானவைகளாயிருந்தன. அவற்றின் உயரம் முந்நூற்றைம்பது அடி; கனம் பதினேழு அடி, கோட்டையின் சுற்றளவு அறுபது மயில்கள். இச் சுவர்கள் செங்கல்லினால் கட்டப்பட்டிருந்தும் நிலக்கீல் (Bitumen) என்ற ஓர்வகைச் சேற்றினால் செங்கற்கள் இணைக்கப்பட்டிருந்தபடியால் சுவர்கள் சொற்பகாலத்திற்குள் மிகவும் இறுகிக் கருங்கல்லுக்கொப்பாய்க் கடினமாகிவிட்டன. கோட்டையானது சமசதிரமாயிருந்தது. அதற்கு வாசல்கள் நூறு. இவ்வாசல்கள் வெண்கலத்தினால் சமைந்திருந்தன. கோட்டைச்சுவர்களின்பேரில் இருநூற்றைம்பது கோபுரங்கள் கட்டப்பட்டிருந்தன. கோட்டையைச்சுற்றி எப்போதும் தண்ணீர்நிறைந்த விஸ்தாரமும் ஆழமுமான அகழ் ஒன்றிருந்தது. கோட்டைச்சுவர்களின் உச்சியின்பேரில் வாகனங்கள் வண்டில்கள் தாராளமாய்ப் போக்குவரவு செய்துகொண்டிருந்தன. இச்சுவர்கள் இரண்டுலக்ஷம் வேலையாட்களினால் ஒரு வருஷகாலத்திற்குள் கட்டிமுடிக்கப்பட்டனவாம். இவற்றைக் கட்டுவித்தது செமிரமிஸ் இராணி என்று சிலர் சொல்லுகிறார்கள், வேறுசிலர் நேபுகாத்நெஜார் ராஜனென்று அபிப்பிராயங்கொள்ளுகிறார்கள். ஆனால் இக்கோட்டையானது கிறிஸ்துவுக்குமுன் நூற்றுமுப்பதாம் வருஷத்தில் பேர்சியதேசத்து அரசனாகிய சைரஸ் (Cyrus) என்பவனால் அழிக்கப்பட்டுப்போயிற்று.

---

## போலாந்தில் பெண்கள் விவாகஞ்செய்து கொள்ளுகிற விதம்.

ஐரோப்பா கண்டத்திலுள்ள போலாந்து தேசத்தில் பூர்விகத்தில் ஓர் வழக்கமுண்டாயிருந்தது. அது இப்போதும் அத்தேசத்தின் சில பாகங்களில் நடைபெற்று வருகின்றது. அவ்வழக்கமியாதெனில். ஒருவன் ஒரு கன்னிகையின்பேரில் நேசம்வைத்து அவளை விவாகஞ்செய்ய பிரியப்படும்போது தன் விருப்பத்தைக் கன்னிகையின் பெற்றோர்களிடத்தில் அல்லது சவரக்ஷணை கர்த்தரிடத்தில் வெளியிடுவான். பின்பு பந்தய ஓட்டத்

திற்கு நாளும் இடமும நியமிப்பார்கள். புருஷனும் ஸ்ரீயும் பந்தய ஓட்டத்தை ஆரம்பிக்குமுன் பந்தயச்சாலையில் மூன்றி லொருபாகதூரம் ஸ்திரீ முந்தியும் புருஷன் பிந்தியுமாக நிற்கும் படி செய்வார்கள். பினபு அவ்விருவரும் ஏககாலத்தில் ஓடத் துவக்குவார்கள். புருஷன் ஸ்திரீக்கு முந்திக்கொண்டால் அவள் அவனை விவாகஞ்செய்துகொள்ளவேண்டும்; அவள் மறுக்கக் கூடாது. ஆனால் ஓட்டத்தில் அவன் தோற்றுப்போனால் அவன் அந்த ஸ்திரீயை விவாகஞ்செய்துகொள்ள ஏதுவிராது. பந்தயச் சாலையில் ஸ்திரீகள் புருஷர்களுக்கு முந்தி நிற்கிறதினால் அவர்க ளுக்கு மனமில்லாதபக்ஷத்தில் புருஷர்கள் அவர்களுடைய ஓட் டத்தைப் பிடிப்பது வருத்தமான காரியம். கன்னிகைகள் தங் களைப் பின்தொடாநது வருகிற புருஷர்களை விவாகம்பண்ணிக் கொள்ள விரும்பினால், அவர்கள் தாமசமாய் ஓடி, அப்புருஷர் கள் தங்களை முந்திக்கொள்ளும்படி இடங்கொடுப்பார்கள். இவ் வழக்கம் போலாந்திலுள்ள சாதாரண ஜனங்களுக்குள் நடக்கின் றது. அதினால் கன்னிகைகள் தங்களுக்கு இஷ்டமில்லாத மாப் பிள்ளைகளை விவாகஞ்செய்ய இடமில்லை. போலாந்தில் இவ்வகை யாய் விவாகஞ்செய்துகொள்ளுகிற ஸ்திரீ புருஷர்கள் பெரும்பா லும் சந்தோஷமாயும் ஐக்கியமாயும் வாழுகிறார்கள்.

---

## சமாசார சங்கிரகம்.

கிணற்றில் முழுகி இறந்த மூன்றுபேர்கள்.—சென்னபட்ட ணத்தைச்சேர்ந்த திருவல்லிக்கேணியிலுள்ள ஓர் கிணற்றில் தவளையொன்று செத்து மிதந்துகொண்டிருந்தது. அதினால் தண் ணீர் துர்க்கந்தமுள்ளதாயிற்று. தவளையை எடுத்து வெளியே எறியும்பொருட்டு, செனறமீ 13௳ ஒருவன் அக்கிணற்றுக்குள் இறங்கினான். இவன் வெகுநேரம்வரையும் கிணற்றினின்று ஏறி வர ஏதுவில்லாதிருந்ததினால் அவனுக்கு உதவிசெய்யும்பொருட் டாக வேறொருவன் இறங்கினான். இவனும் கீழே போனவுடனே மூச்சுத் திக்குமுக்கடைந்து தண்ணீர்க்குள் அமிழ்ந்துபோனான். பின்பு மூன்றாவதாக வேறொருவன் ஓர் கயிற்றைப் பிடித்துக் கொண்டு கிணற்றுக்குள் இறங்கினான். இவனும் சுவாச இக்கட்டி னால் இறந்துபோனான். இதன்பின்பு போலீசுக்காரர் காரியத்தை

அறிந்துவந்து, மூன்று பிரேதங்களையும் கிணற்றிலிருந்து வெளியே எடுப்பித்தார்கள். அகாலமரண விசாரணைகர்த்தர் இச்சங்கதியைப்பற்றி தீர்க்கவிசாரணை செய்ததின்பேரில், பாழ்ங்கிணறுகளுக்குள் ஜனங்கள் திடீரென இறங்கக்கூடாதென்று போலீசு கமிஷ்னர் நிபந்தனை செய்யவேண்டியது அவசியமென்று தெரியபடுத்தினார். இச்சம்பவமானது இப்பத்திரிகையின் முன்பாகத்தில் கரி அமிலவாயு பாழ்ங்கிணறுகளுக்குள்ளிருந்து அவற்றுள் இறங்குகிறவர்களுக்குப் பிராணமோசத்தை வருவிக்குமென்று சொல்லியிருப்பதற்கு நல்ல திருஷ்டாந்தமாயிற்று.

---

சுதேசிகளின் கல்விவிர்த்தி.—காசிநகரத்தில் சிறு வியாச்சியங்களைத் தீர்க்கும் நியாயாதிபதியும், இந்திய நட்சத்திரப் பட்டத்தைப் பெற்றவருமாகிய சைய்யத் ஆமத்கான் என்னும் ஓர் மகமதிய கனவான் இங்கிலாந்திற்குப்போய்த் தமது இரண்டாவது குமாரனை கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் அங்கிலேயருடன் சேர்ந்து கல்வி பயிலும்படி திட்டஞ்செய்திருக்கிறார். மேலும், பெங்காளநாட்டிலிருந்து வேறொருவர் இக்கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிலும், வேறிரண்டு இந்தி வித்தியார்த்திகள் ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையிலும் கல்விகற்கப் பிரவேசித்திருக்கிறார்கள்.

---

அதிசயமான குதிரைக்குட்டி. — ஹைதிராபாக்கத்திலிருந்து ஒரு மகமதியன் பெங்களூருக்குப்போய் அங்குள்ள ஜனங்களுக்கு ஒரு குதிரைக்குட்டியை அதிசயமாகக் காட்டி, அவர்களிடம் தலைக்கு ஒரு அணா வீதம் வாங்கிக்கொண்டிருக்கிறானாம். இக்குதிரைக்குட்டிக்கு இரண்டு கால்கள்தான் இருக்கின்றனவாம். முன்கால்கள் இரண்டும் அதற்கில்லை; அது படுத்த நிலையிலே கிடக்கின்றது; அதற்கு இரை பால்.

---

பெண்கள் போதனாசக்தி வித்தியாசாலை.—சென்னைபுரியில ஸ்தாபிக்கப்போகும் இவ்வித்தியாசாலைக்குத் தலைவியாக ஓர் அங்கிலேயக் கன்னிகையை இந்திய துரைத்தன மந்திரி ஏற்படுத்தி அனுப்பியிருக்கிறார். இத்தலைவிக்கு மாசமொன்றுக்குச் சம்பளம் ரூபாய் 300. இவ்வித்தியாசாலையின் கிரியை இவ்வருஷமுடிவிற்குமுன் ஆரம்பிக்கப்படும்.